# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**


ஆணை நாள் 02.11.2020

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1818/B/2020**

திரு. இரா. அரிகிருஷ்ணன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்),
கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம்,
நாகப்பட்டினம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (02.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு. இரா. அரிகிருஷ்ணன் மற்றும் பொது தகவல் அலுவலர், திரு.கோபாலகிருஷ்ணன் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 16.08.2019 தேதியிட்ட மனுவில், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுகா, புளியந்துரை ஊராட்சியில் 2014-2015 மற்றும் 2015-16ஆம் ஆண்டுகளில் முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் வறுமையிலும் வறுமையில் வாடும் ஏழை பயனாளிகள் பற்றிய விபரங்களோடு மேற்படி திட்ட செயல்பாடு சமயத்தில் வேலைகளை செயல்படுத்தும் பொறுப்புக்குரிய அலுவலர்களின் பெயர்கள், பதவி மற்றும் பணியிலிருந்து கால விபரத்தோடு தற்போது பணியிலிருக்கும் அலுவலக விலாசம் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி எண் ஆகியவற்றை தகவலாக கோரி, பொது தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு மனு செய்துள்ளார். மேலும், பெரும்பான்மையான பொது மக்களின் செயல்பாட்டுடனும் நலனுடன் சம்ப்ந்தப்பட்டதால் பொது நோக்குடன் தகவல் கேட்பதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். மனுதாரருக்கு தகவல் அளிப்பதில் பொது நலன் இருப்பதாக ஆணையம் கருதுகிறது.

3. பொது தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் திருப்தியளிக்காததால், மனுதாரர், 26.9.2019 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் முழுமையான தகவல் பெறப்படாததால் தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 20.2.2020 தேதியிட்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மனுதாரருக்குரிய தகவல்கள் அவருக்கு முழுமையாக கிடைக்கவில்லை என்பதை நன்கு உணர முடிகிறது. இருப்பினும் மனுதாரர் பிரிவு 6(1)ல் கோரியுள்ள தகவல்களை மனுதாரருக்கு வழங்க வேண்டும் என ஆணையம் கருதி, மேற்படி மனுதாரரின் தகவல் சம்பந்தமான விசாரணையை, வருவாய் கோட்டாட்சியர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம் அவர்கள் தீர விசாரித்து, அந்த ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற அனைத்து பணிகளையும் ஆய்வு செய்து விசாரணை நடத்தி விசாரனை நடைபெற்ற 10 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் இவ்வழக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மனுதாரர் ஆகியோர் விசாரணையின்போது இருக்க வேண்டும் என்றும் ஆணையம் உத்திரவிட்டு, இவ்வழக்கின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுக்கின்றன:-

**மனுதாரரின் 16.8.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக, மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், மனுதாரர் கோரியுள்ள ஆவணங்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 25 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, கொள்ளிடம் துணை வட்டார வளர்ச்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் மூலம் சமர்ப்பிக்க ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.</u>** <u>SA 1818/ B/ 2020</u>

**<u>பெறுநர்</u>**

வருவாய் கோட்டாட்சியர்,
கோட்டாட்சியர் அலுவலகம்,
மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்.

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
(ஊராட்சிகள்), கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

திரு. இரா. அரிகிருஷ்ணன்,
பெரியத்தெரு, புளியந்துறை (PO),
சீர்காழி - 609 101.
கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம்.

Copy to: File

SSPA-04.11.2020